# இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின்
# பாராளுமன்றம்

---

## *2012 ஆம் ஆண்டின் 12 ஆம் இலக்க, நிதிச் சட்டம்*

---

*(2012 ஆம் ஆண்டு மாச்சு மாதம் 30 ஆம் திகதி அத்தாட்சிப்படுத்தப்பட்டது)*

*அரசினர் ஆணைப்படி அச்சிடப்பட்டது*

---

*2012, மாச்சு மாதம் 30 ஆந் தேதிய* ***இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின் வர்த்தமானப் பத்திரிகையின்*** II ஆம் பகுதிக்குக் குறைநிரப்பியாக வெளியிடப்பட்டது

இலங்கை அரசாங்க அச்சுத் திணைக்களத்தில் பதிப்பிக்கப்பெற்றது

கொழும்பு 5, அரசாங்க வெளியீட்டலுவலகத்தில் பெற்றுக்கொள்ளலாம்

**விலை : ரூபா *18.00***  **தபாற் செலவு : ரூபா *10.00***

## ***2012 ஆம் ஆண்டின் 12 ஆம் இலக்க, நிதிச் சட்டம்***

*[2012 ஆம் ஆண்டு மாச்சு மாதம் 30 ஆம் திகதி அத்தாட்சிப் படுத்தப்பட்டது]*

*ச.வ.ஓ. 8 /2012*

***2003 ஆம் ஆண்டின் 25 ஆம் இலக்க, நிதிச்சட்டம், 2004 ஆம் ஆண்டின் 11 ஆம் இலக்க, நிதிச்சட்டம் மற்றும் 1995 ஆம் ஆண்டின் 16 ஆம் இலக்க, நிதிச்சட்டம் என்பனவற்றைத் திருத்துவதற்கும் (235 ஆம் அத்தியாயமான) சுங்கக் கட்டளைச் சட்டத்தினதும் (423 ஆம் அத்தியாயமான) செலவாணிக் கட்டுப்பாட்டுச் சட்டத்தினதும் 1969 ஆம் ஆண்டின் 1 ஆம் இலக்க, இறக்குமதி ஏற்றுமதி (கட்டுப்பாடு) சட்டத்தின் ஏற்பாடுகளின் ஏற்புடைமை யிலிருந்து குறித்த செயற்பாடுகளில் ஈடுபட்ட குறித்த சில தொழில் முயற்சிகளை விலக்களிப்பிற்கு ஏற்பாடு செய்வதற்கும்; அத்துடன் அவற்றோடு தொடர்புபட்ட அல்லது அவற்றிற்கு இடைநேர்விளைவான கருமங்க ளுக்கு ஏற்பாடு செய்வதற்குமானதொரு சட்டம்***

*இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின் பாராளுமன்றத் தால் பின்வருமாறு சட்டமாக்கப்படுவதாகுக :-*

*சுருக்கப் பெயர்.*

***1.** இச்சட்டம், 2012 ஆம் ஆண்டின் 12 ஆம் இலக்க, நிதிச் சட்டம் என எடுத்துக் காட்டப்படலாம்.*

### *பாகம்* I

### ***2003 ஆம் ஆண்டின் 25 ஆம் இலக்க, நிதிச்சட்டத்தின் II அ என்னும் பாகத்தினைத் திருத்துதல்***

*2003ஆம் ஆண்டின் 25ஆம் இலக்க, சட்டத்தின் IIஅ என்னும் பாகத்தின் 13அ என்னும் பிரிவைத் திருத்துதல்.*

***2.** (இதனகத்துப்பின்னர் இச்சட்டத்தின் இப்பாகம் "முதன்மைச் சட்டவாக்கம்" எனக் குறிப்பீடு செய்யப்படும்.) 2003ஆம் ஆண்டின் 25 ஆம் இலக்க, நிதிச் சட்டத்தின் II அ என்னும் பாகத்தின் (ஐந்து நட்சத்திர ஹோட்டல்களிலுள்ள அறைகளின் மீதான விதிப் பனவு) 13அ என்னும் பிரிவின் (1) ஆம் உட்பிரிவில் "சமமான அறவீடொன்றைச் செலுத்துமாறு தேவைப்படுத்தப்படுதல் வேண்டும்." என்னும் சொற்களுக்குப் பதிலாகப் பின்வரும் சொற்களை இடுவதன் மூலம் இத்தால் திருத்தப்படுகின்றது.*

*"சமமான அறவீடொன்றைச் செலுத்துமாறு தேவைப்படுத் தப்படுதல் வேண்டும் :*

2-PL 006667-1225 (2012/03)

ஆயின் எவ்வாறாயினும், அத்தகைய விலை ஒழுங்குவிதிக் கட்டளையால் விதித்துரைக்கப் பட்ட சலுகைப்படியான வீதம் எந்த விமான பணியாட்டொகுதி உறுப்பினருக்கு ஏற்புடையதாகின் றதோ அந்த விமானப் பணியாளருக்கு வழங்கப்பட்ட ஏதேனும் அறை தொடர்பில் மேற்குறிப்பிடப்பட்ட ஏதேனும் ''ஐந்து நட்சத்திர ஹோட்டல்'' இனால் அத்தகைய விதிப்பனவெதுவும் செலுத்துமாறு தேவைப் படுத்தப்படலாகாது.".

நட்டோத் தரவாதம்.

3. 2011 ஆம் ஆண்டு ஏப்பிறல் 1ஆம் தேதியன்று தொடங்கி இச்சட்டம் நடைமுறைக்கு வரும் தேதி வரையிலுமான காலப்பகுதியின்போது ஐந்து நட்சத்திர ஹோட்டல்களிலுள்ள அறைகளின் மீதான விதிப்பனவு சலுகைப்படியான வீதத்தின்கீழ் எவரேனும் விமானப் பணியாட்டொகுதி உறுப்பினருக்கு வழங்கப்பட்ட ஏதேனும் அறை தொடர்பில் முதன்மைச் சட்டவாக்கத்தின் 13அ என்னும் பிரிவின் (3)ஆம் உட்பிரிவின் கீழ் வழங்கப்பட்ட வழிகாட்டுநெறிகளால் இலங்கை உல்லாசப்பயண அபிவிருத்தி அதிகாரசபையின் தவிசாளரினால் அல்லது அது சார்பில் அதிகாரமளிக்கப்பட்ட வேறு எவரேனும் ஆளினால் விதிக்கப்படுகின்றவிடத்து, அத்தகைய ஆள் முறையான அதிகாரத்துடன் செயற்பட்டதாகக் கருதப்படுதல் வேண்டும் என்பதுடன் அத்தகைய சேகரிப்பானது எல்லா நோக்கங்களுக் காகவும் செல்லுபடியாகும் விதத்தில் செய்யப்பட்டுள்ளதாகவும் செய்யப்படவுள்ளதாகவும் கருதப்படுதல் வேண்டுமென்பதுடன் அத்தகைய சேகரிப்புத் தொடர்பில், எல்லாக் குடியியல் அல்லது குற்றவியல் நடவடிக்கைகளுக்கு எதிராக அத்தகைய தவிசாளர் அல்லது ஆட்கள் இத்தால் நட்டோத்தரவாதம் செய்யப்படு கின்றார்.

## பாகம் II

### 2004 ஆம் ஆண்டின் 11 ஆம் இலக்க, நிதிச்சட்டத்தின் III அ என்னும் பாகத்தை நீக்குதல்

2004ஆம் ஆண்டின் 11ஆம் இலக்கச் சட்டத்தின் பாகம் III அ வினை நீக்குதல்.

4. (இச்சட்டத்தின் இப்பாகத்தில் இதனகத்துப்பின்னர் ''முதன்மைச் சட்டவாக்கம்'' எனக் குறிப்பீடு செய்யப்படும்.) 2004ஆம் ஆண்டின் 11ஆம் இலக்க, நிதிச்சட்டத்தின் III அ என்னும் பாகத்தை (மோட்டார் வாகனப் பதிவின் மீதான பிடித்து வைத்தல் வரி விதிப்பனவு) 2011ஆம் ஆண்டு நவெம்பர் 24ஆந் தேதியிலிருந்து நடைமுறைக்குவரும் வகையில் இத்தால் நீக்கப்படு கின்றது.

**5.** (1) முதன்மைச் சட்டவாக்கத்தின் ஏற்பாடுகள், (2)ஆம் உட்பிரிவின் கீழ் தரப்பட்ட விடயங்கள் தொடர்பில், அதன் பாகம் III அ வின் நீக்கம் எவ்வாறிருப்பினும், நீக்கப்பட்ட III அ என்னும் பாகத்தின் கீழ் வருமதியான ஏதேனும் பணத்தொகையை அறவிடுவதற்காகத் தேவைப்படுத்தக்கூடியவாறான அத்தகைய காலப்பகுதிக்கு செயற்பாட்டில் இருத்தல் வேண்டும். பேணல்கள்.

(2) 2011ஆம் ஆண்டின் நவெம்பர் 24ஆந் தேதியிலிருந்து பயனுறுவதாக முதன்மைச் சட்டவாக்கத்தின் III அ என்னும் பாகத்தின் நீக்கம் எவ்வாறிருப்பினும், மோட்டார் போக்குவரத்து ஆணையாளர் 2011ஆம் ஆண்டு நவெம்பர் 24ஆந் தேதிக்கு உடன் முன்னரான நாளன்று மோட்டார் வாகனங்களைப் பதிவு செய்வதன் மீது பிடித்து வைத்திருக்கும் வரியாக வருமதியான எல்லாத் தொகையினையும் அறவிடுவதற்கு இத்தால் தத்துவமளிக்கப்படுகின்றார் என்பதுடன் நீக்கப்பட்ட III அ என்னும் பாகத்தின் 28இ என்னும் பிரிவின் ஏற்பாடுகளின் நியதிகளின்படி ஆணையாளர் தலைமையதிபதிக்கு பிடித்துவைத்திருக்கும் வரியாக அவரால் அவ்வாறு அறவிடப்பட்ட எல்லாப் பணத் தொகையும் மாற்றப்படுகின்றது.

## பாகம் III

### 1995 ஆம் ஆண்டின் 16 ஆம் இலக்க, நிதிச்சட்டத்தின் II ஆம் பாகத்தினைத் திருத்துதல்

**6.** (இதனகத்துப்பின்னர் இச்சட்டத்தின் இப்பாகத்தில் ''முதன்மைச் சட்டவாக்கம்'' எனக் குறிப்பீடு செய்யப்படும்) 1995ஆம் ஆண்டின் 16ஆம் இலக்க, நிதிச்சட்டத்தின் 3ஆம் பிரிவு இத்தால் நீக்கப்பட்டு அதற்குப் பதிலாக பின்வரும் பிரிவு இடப்படுகின்றது:- 1995ஆம் ஆண்டின் 16ஆம் இலக்கச் சட்டத்தின் 3ஆம் பிரிவு மாற்றீடு செய்யப் படுகின்றது.

''ஆடம்பர மோட்டார் வாகன ஆண்டு அறவீடு.

3. (1) (ஓரளவு ஆடம்பர இரட்டை நோக்க மோட்டார் வாகனமொன்றை அல்லது பார வண்டியொன்றைத் தவிர) ஆடம்பர மோட்டார் வாகனம் ஒவ்வொன்றின் மீதும்-

(அ) முதலாவது பதிவாண்டு 2011, சனவரி 1ஆம் தேதிக்கு முன்னர் வருமிடத்து, 1995, ஏப்பிறல் 1 ஆம் தேதியன்று அல்லது

அதன்பின்னர் தொடங்குகின்ற ஒவ்வோராண்டிற்கும், ஆனால் 2011, ஏப்பிறல் 1ஆம் திகதிக்கு முன்னர் முடிவடைகின்ற ஏழாண்டுகளுக்கு மேற்படாத காலப் பகுதிக்கும், இச்சட்டத்துக்கான முதலாம் அட்டவணையின் பாகம் I இல் தரப்பட்டுள்ள அந்தந்த வீதங்களிலும் ;

(ஆ) முதலாவது பதிவாண்டு அல்லது ஏதேனும் ஆண்டின் கொடுப்பனவு செய்யப்படுவதற்குரிய தேதி 2011, சனவரி 1 ஆம் திகதியன்று தொடங்கி 2011 ஆம் ஆண்டு நவெம்பர் 22ஆந் தேதிக்கு முன்னர் முடிவடையும் காலப்பகுதிக்குள் வருமிடத்து, இச்சட்டத்துக்கான முதலாம் அட்டவணையின் பாகம் II இல் தரப்பட்டுள்ள அந்தந்த வீதங்களிலும் ; அத்துடன்

(இ) முதலாவது பதிவாண்டு அல்லது ஏதேனும் ஆண்டின் கொடுப்பனவு செய்யப்படுவதற்குரிய 2011, நவெம்பர் 22 ஆம் தேதிக்குப் பின்னர் வருமிடத்து, அத்தகைய தேதியிலிருந்து ஏழாண்டுகளுக்கு மேற்படாத காலப்பகுதிக்கு இச்சட்டத்திற்கான முதலாம் அட்டவணையின் பாகம் III இல் தரப்பட்டுள்ள அந்தந்த வீதங்களிலும்,

ஆடம்பர மோட்டார் வாகன அறவீடொன்று அறவிடப்படுதலும், விதிக்கப்படுதலும், செலுத்தப்படுதலும் வேண்டும். அத்தகைய ஒவ்வோராண்டிற்கும் செலுத்தப்படற்பாலதான அறவீடு, இயைபான திகதியன்று அல்லது அதற்கு முன்னர் ஆடம்பர மோட்டார் வாகனத்தின் பதிவு செய்யப்பட்ட சொந்தக்காரரினால் செலுத்தப்படுதல் வேண்டும்:

ஆயின் எவ்வாறாயினும், மேலே (அ) என்னும் பந்தியில் குறிப்பீடு செய்யப்பட்ட ஏழு ஆண்டுகள் காலப்பகுதியின் ஏதேனும் பாகம் 2011, சனவரி 1ஆந் தேதிக்குப் பின்னர் தொடருகின்றவிடத்து, அத்தகைய காலப்பகுதி தொடர்பில் 2011, நவெம்பர்

22ஆந் தேதியன்று அல்லது அதன்பின்னர் செலுத்தப்படற் பாலதான ஆடம்பர மோட்டார் வாகன அறவீடு இச்சட்டத்தின் முதலாம் அட்டவணையின் பாகம் III இல் தரப்பட்டுள்ள அந்தந்த வீதங்களில் செலுத்தப்படுதல் வேண்டும்:

ஆயின் மேலும், அத்தகைய ஆடம்பர மோட்டார் வாகன அறவீடு-

(அ) 1996ஆம் ஆண்டின் 9ஆம் இலக்க, இராஜதந்திர சிறப்புரிமைகள் சட்ட ஏற்பாடுகள் ஏற்புடைத்தாகின்ற ஒழுங்கமைப்பொன்றினால் அல்லது தனியாளொரு வரினால்; அல்லது

(ஆ) அரசாங்க திணைக்களமொன்றினால் அல்லது அமைச்சொன்றினால் அல்லது மாகாண சபையொன் றினால்,

சொந்தமாக வைத்திருக்கப்படும் ஏதேனும் ஆடம்பர மோட்டார் வாகனம் தொடர்பில் அறவிடற்படுதலாகாது.

(2) இப்பிரிவின் நோக்கங்களுக்காக "மாகாண சபை" என்பது அரசியலமைப்பின் XVII அ என்னும் அத்தியாயத்தின் கீழ் தாபிக்கப்பட்ட மாகாண சபையொன்று எனப் பொருள்படும்.".

**7.** முதன்மைச் சட்டவாக்கத்தின் 4 ஆம் பிரிவு இத்தால் நீக்கப்பட்டு அதற்குப் பதிலாகப் பின்வரும் பிரிவு இடப்படுகின் றது:- முதன்மைச் சட்டவாக்கத்தின் 4ஆம் பிரிவை மாற்றீடு செய்தல்.

"ஓரளவு ஆடம்பர மோட்டார் வாகன ஆண்டு அறவீடு.

4. (1) (ஓரளவு ஆடம்பர இரட்டை நோக்க மோட்டார் வாகனமொன்றை அல்லது பார வண்டியொன்றைத் தவிர) ஓரளவு ஆடம்பர மோட்டார் வாகனம் ஒவ்வொன்றின் மீதும்-

(அ) முதலாவது பதிவாண்டு 2011, சனவரி 1ஆம் திகதிக்கு முன்னர் வருமிடத்து, 1995, ஏப்பிறல் 1 ஆம் திகதியன்று அல்லது அதன் பின்னர் தொடங்குகின்ற ஒவ்வோராண்டிற்கும், ஆனால் 2011, ஏப்பிறல் 1 ஆம் திகதிக்கு முன்னர் முடிவடைகின்ற ஏழாண்டுகளுக்கு

மேற்படாத காலப்பகுதிக்கும், இச்சட்டத் துக்கான இரண்டாம் அட்டவணையின் பாகம் I இல் தரப்பட்டுள்ள அந்தந்த வீதங்களிலும் ;

(ஆ) முதலாவது பதிவாண்டு அல்லது ஏதேனும் ஆண்டின் கொடுப்பனவு செய்யப்படுவதற்குரிய தேதி 2011, சனவரி 1ஆம் திகதியன்று அல்லது அதன் பின்னர் தொடங்கி 2011 ஆம் ஆண்டு நவெம்பர் 22 ஆந் தேதிக்கு முன்னர் முடிவடையும் காலப்பகுதிக்குள் வரு மிடத்து, இச்சட்டத்துக்கான இரண்டாம் அட்டவணையின் பாகம் II இல் தரப் பட்டுள்ள அந்தந்த வீதங்களிலும் ; அத்துடன்

(இ) முதலாவது பதிவாண்டு அல்லது ஏதேனும் ஆண்டின் கொடுப்பனவு செய்யப்படுவதற்குரிய தேதி 2011, நவெம்பர் 22 ஆம் தேதிக்குப் பின்னர் வருமிடத்து, அத்தகைய தேதியிலிருந்து ஏழாண்டுகளுக்கு மேற்படாத காலப் பகுதிக்கு இச்சட்டத்திற்கான இரண்டாம் அட்டவணையின் பாகம் III இல் தரப் பட்டுள்ள அந்தந்த வீதங்களிலும்,

ஓரளவு ஆடம்பர மோட்டார் வாகன அறவீடொன்று அறவிடப்படுதலும், விதிக்கப்படுதலும், செலுத்தப் படுதலும் வேண்டும். அத்தகைய ஒவ்வோராண் டிற்கும் செலுத்தப்படற்பாலதான அறவீடு, இயைபான திகதியன்று அல்லது அதற்கு முன்னர் ஓரளவு ஆடம்பர மோட்டார் வாகனத்தின் பதிவு செய்யப்பட்ட சொந்தக்காரரினால் செலுத்தப்படு தல் வேண்டும்:

ஆயின் எவ்வாறாயினும், மேலே (அ) என்னும் பந்தியில் குறிப்பீடு செய்யப்பட்ட ஏழு ஆண்டுகள், காலப்பகுதியின் ஏதேனும் பாகம் 2011, சனவரி 1ஆந் தேதிக்குப் பின்னர் தொடருகின்றவிடத்து, அத்தகைய காலப்பகுதி தொடர்பில் 2011, நவெம்பர் 22ஆந் தேதியன்று அல்லது அதன்பின்னர் செலுத் தப்படற்பாலதான ஓரளவு ஆடம்பர மோட்டார் வாகன அறவீடு இச்சட்டத்தின் இரண்டாம் அட்டவணையின் பாகம் III இல் தரப்பட்டுள்ள அந்தந்த வீதங்களில் செலுத்தப்படுதல் வேண்டும்:

ஆயின் மேலும், அத்தகைய ஓரளவு ஆடம்பர மோட்டார் வாகன அறவீடு-

(அ) 1996ஆம் ஆண்டின் 9 ஆம் இலக்க, இராஜதந்திர சிறப்புரிமைகள் சட்ட ஏற்பாடுகள் ஏற்புடைத்தாகின்ற ஒழுங்கமைப்பொன்றினால் அல்லது தனியாளொருவரினால் ; அல்லது

(ஆ) அரசாங்க திணைக்களமொன்றினால் அல்லது அரசாங்க அமைச்சொன்றி னால் அல்லது மாகாண சபையொன்றி னால்,

சொந்தமாக வைத்திருக்கப்படும் ஏதேனும் ஓரளவு ஆடம்பர மோட்டார் வாகனம் தொடர்பில் அறவிடற்படுதலாகாது.

(2) இப்பிரிவின் நோக்கங்களுக்காக ''மாகாண சபை'' என்பது அரசியலமைப்பின் XVII அ என்னும் அத்தியாயத்தின் கீழ் தாபிக்கப்பட்ட மாகாண சபையொன்று எனப் பொருள்படும்.''.

**8**. முதன்மைச் சட்டவாக்கத்தின் 5 ஆம் பிரிவு இத்தால் நீக்கப்பட்டு அதற்குப் பதிலாகப் பின்வரும் பிரிவு இடப்படு கின்றது:- *முதன்மைச் சட்டவாக்கத்தின் 5ஆம் பிரிவை மாற்றீடு செய்தல்.*

"ஓரளவு ஆடம்பர இரட்டை நோக்க மோட்டார் வாகன ஆண்டு அறவீடு.

5. (1) (பாரவண்டியொன்றைத் தவிர) ஓரளவு ஆடம்பர இரட்டை நோக்க மோட்டார் வாகனம் ஒவ்வொன்றின் மீதும்–

(அ) முதலாவது பதிவாண்டு 2011, சனவரி 1ஆம் தேதிக்கு முன்னர் வருமிடத்து, 1995, ஏப்பிறல் 1ஆம் திகதியன்று அல்லது அதன்பின்னர் தொடங்குகின்ற ஒவ்வோராண்டிற்கும், ஆனால் 2011, ஏப்பிறல் 1 ஆம் திகதிக்கு முன்னர் முடிவடைகின்ற ஏழாண்டுகளுக்கு மேற்படாத காலப்பகுதிக்கும், இச்சட்டத் துக்கான மூன்றாம் அட்டவணையின் பாகம் I இல் தரப்பட்டுள்ள அந்தந்த வீதங்களிலும் ;

(ஆ) முதலாவது பதிவாண்டு அல்லது ஏதேனும் ஆண்டின் கொடுப்பனவு செய்யப்படுவதற்குரிய தேதி 2011, சனவரி 1ஆம் திகதியன்று தொடங்கி 2011ஆம் ஆண்டு நவெம்பர் 22ஆந் தேதிக்கு முன்னர் முடிவடையும் காலப் பகுதிக்குள் வருமிடத்து, இச்சட்டத் துக்கான மூன்றாம் அட்டவணையின் பாகம் II இல் தரப்பட்டுள்ள அந்தந்த வீதங்களிலும் ; அத்துடன்

(இ) முதலாவது பதிவாண்டு அல்லது ஏதேனும் ஆண்டின் கொடுப்பனவு செய்யப்படுவதற்குரிய 2011, நவெம்பர் 22ஆம் தேதிக்குப் பின்னர் வருமிடத்து , அத்தகைய தேதியிலிருந்து ஏழாண்டு களுக்கு மேற்படாத காலப்பகுதிக்கு இச்சட்டத்திற்கான மூன்றாம் அட்டவணை யின் பாகம் III இல் தரப்பட்டுள்ள அந்தந்த வீதங்களிலும்,

ஓரளவு ஆடம்பர இரட்டை நோக்க மோட்டார் வாகன அறவீடொன்று அறவிடப்படுதலும், விதிக்கப்படுதலும், செலுத்தப்படுதலும் வேண்டும். அத்தகைய ஒவ்வோராண்டிற்கும் செலுத்தப் படற்பாலதான அறவீடு, இயைபான திகதியன்று அல்லது அதற்கு முன்னர் ஓரளவு ஆடம்பர இரட்டை நோக்க மோட்டார் வாகனத்தின் பதிவு செய்யப்பட்ட சொந்தக்காரரினால் செலுத்தப்படு தல் வேண்டும்:

ஆயின் எவ்வாறாயினும், மேலே (அ) என்னும் பந்தியில் குறிப்பீடு செய்யப்பட்ட ஏழு ஆண்டுகள், காலப்பகுதியின் ஏதேனும் பாகம் 2011, சனவரி 1ஆந் தேதிக்குப் பின்னர் தொடருகின்றவிடத்து, அத்தகைய காலப்பகுதி தொடர்பில் 2011, நவெம்பர் 22ஆந் தேதியன்று அல்லது அதன்பின்னர் செலுத்தப்படற்பாலதான ஓரளவு ஆடம்பர இரட்டை நோக்க மோட்டார் வாகன அறவீடு இச்சட்டத்தின் மூன்றாம் அட்டவணையின் பாகம்III இல் தரப்பட்டுள்ள அந்தந்த வீதங்களில் செலுத்தப் படுதல் வேண்டும்:

ஆயின் மேலும், அத்தகைய ஓரளவு ஆடம்பர இரட்டை நோக்க மோட்டார் வாகன அறவீடு -

(அ) 1996 ஆம் ஆண்டின் 9 ஆம் இலக்க, இராஜதந்திர சிறப்புரிமைகள் சட்ட ஏற்பாடுகள் ஏற்புடைத்தாகின்ற ஒழுங் கமைப் பொன்றினால் அல்லது தனியா ளொருவரினால் ; அல்லது

(ஆ) அரசாங்க திணைக்களமொன்றினால் அல்லது அரசாங்க அமைச்சொன் றினால் அல்லது மாகாண சபையொன் றினால்,

சொந்தமாக வைத்திருக்கப்படும் ஏதேனும் ஆடம்பர மோட்டார் வாகனம் தொடர்பில் அறவிடற்படு தலாகாது.

(2) இப்பிரிவின் நோக்கங்களுக்காக "மாகாண சபை" என்பது அரசியலமைப்பின் XVII அ என்னும் அத்தியாயத்தின் கீழ் தாபிக்கப்பட்ட மாகாண சபையொன்று எனப் பொருள்படும்.".

*முதன்மைச் சட்டவாக்கத்தில் 5அ என்னும் புதிய பிரிவை உட்புகுத்துதல்.*

**9**. முதன்மைச் சட்டவாக்கத்தின் 5ஆம் பிரிவை உடனடுத்துப் பின்வரும் புதிய பிரிவு இத்தால் உட்புகுத்தப்படுகின்றது என்பதுடன் அது அச்சட்டவாக்கத்தின் 5அ என்னும் பிரிவு என்றாற்போன்று பயனுறுதலும் வேண்டும்:-

*"பாராளுமன்ற தீர்மானத்தினால் ஆடம்பர, ஓரளவு ஆடம்பர, ஓரளவு ஆடம்பர இரட்டை நோக்க மோட்டார் வாகன அறவீடுகளின் வீதங்களைத் திருத்துதல்.*

5அ. (1) பாராளுமன்றம் தீர்மானத்தின் மூலம்-

(அ) இதற்கான முதலாம் அட்டவணையின் பாகம் I, பாகம் II மற்றும் பாகம் III இல் தரப்பட்டுள்ள ஆடம்பர மோட்டார் வாகன அறவீடு;

(ஆ) இதற்கான இரண்டாம் அட்டவணையின் பாகம் I, பாகம் II மற்றும் பாகம் III இல் தரப்பட்டுள்ள ஓரளவு ஆடம்பர மோட்டார் வாகன அறவீடு ;

(இ) இதற்கான மூன்றாம் அட்டவணையின் பாகம் I , பாகம் II மற்றும் பாகம் III இல் தரப்பட்டுள்ள ஓரளவு ஆடம்பர இரட்டை நோக்க மோட்டார் வாகன அறவீடு,

என்பனவற்றின் வீதங்களை செலுத்தப்படும் தொகையான அறவீட்டின் அதிகரிப்பினால் அல்லது குறைப்பினால் திருத்தலாம்.

(2) வீதங்களைத் திருத்த நாடப்படுகின்ற தீர்மானம், பாராளுமன்ற நிலையியற் கட்டளைகளுக்கிணங்க பாராளுமன்றத்தினால் அங்கீகரிக்கப்படுவதன் மேல், அமைச்சரின் அமைச்சுச் செயலாளர் தரப்பட்டுள்ள திருத்தப்பட்ட வீதங்கள் பற்றிய அறிவிப்பை வர்த்தமானியில் வெளியிடுதல் வேண்டும்.".

*முதன்மைச் சட்டவாக்கத்தின் 10ஆம் பிரிவைத் திருத்துதல்.*

**10.** முதன்மைச் சட்டவாக்கத்தின் 10ஆம் பிரிவானது அதன் (2) ஆம் உட்பிரிவில் "தண்டப்பணமொன்றைச் செலுத்துவதற் காளாதல் வேண்டும்." என்னும் சொற்களுக்குப் பதிலாக பின்வரும் சொற்களை இடுவதன் மூலமும் இத்தால் திருத்தப் படுகின்றது:-

"தண்டப்பணமொன்றாகச் செலுத்துவதற்காளாதல் வேண் டும்:

ஆயின் எவ்வாறாயினும், அவ்வாறு தவணைத் தவறுகை யிலுள்ள தொகை இயைபான தேதியிலிருந்து அறுபது நாட்கள் காலப்பகுதியொன்றினுள் அல்லது அறவீடு செலுத்தப்படு வதற்கான ஆண்டு முடிவுறுவதற்கு முன்னரானகாலப்பகுதி இதில் எது முதல் வருகின்றதோ அந்தக் காலப்பகுதியில் அதன் குறித்துரைக்கப்பட்ட மோட்டார் வாகனமொன்றின் பதிவு செய்யப்பட்ட சொந்தக்காரரினால் செலுத்தப்படின் அத்தகைய தண்டப்பணம் அத்தகைய பதிவு செய்யப்பட்ட சொந்தக்கார ரிடமிருந்து அறவிடற்பாலதாகாது.".

*முதன்மைச் சட்டவாக்கத் துக்கான முதலாம் அட்டவணை யைத் திருத்துதல்.*

**11.** முதன்மைச் சட்டவாக்கத்துக்கான முதலாம் அட்டவணை இத்தாற் பின்வருமாறு திருத்தப்படுகின்றது:-

(1) அவ் அட்டவணையின் பாகம் II இன் தலைப்பினை நீக்கஞ் செய்து அதற்குப் பதிலாக பின்வருவனவற்றை இடுவதன் மூலம்:-

"முதலாவது பதிவாண்டு அல்லது கொடுப்பனவுக் குரிய திகதி 2011, சனவரி 1ஆந் திகதியன்று தொடங்குகின்ற காலப்பகுதியினுள, 2011, நவெம்பர் 22 ஆந் தேதிக்கு முன்னராக முடிவடைகின்ற விடத்து ஏதேனும் ஆண்டுக்காக :"

(2) அதன் பாகம் II இன் உதாரணத்தை நீக்கஞ் செய்து அதற்குப் பதிலாக பின்வருவனவற்றை இடுவதன் மூலம் :-

"உதாரணம்

(அ) ஆடம்பர மோட்டார் வாகனம் ஒன்று 2007, ஓகத்து 1ஆம் திகதி பதிவுசெய்யப்பட்டது. அத்தகைய ஆடம்பர மோட்டார் வாகனத்திற்கு (பதிவு செய்த ஆண்டை அடுத்துவரும் மூன்றாவது ஆண்டான ) 2010, ஏப்பிறல் 1ஆம் திகதியன்று தொடங்கும் ஆண்டுக்கு ஏற்புடையற் பாலதான அறவீடு ரூ35,000 ஆகும்.

(ஆ) ஆடம்பர மோட்டார் வாகனம் ஒன்று 2011, ஓகத்து 1ஆம் திகதி பதிவுசெய்யப்பட்டது. அத்தகைய ஆடம்பர மோட்டார் வாகனத்திற்கு (பதிவுசெய்த ஆண்டுக்கு) ஏற்புடையற் பாலதான அறவீடு ரூ100,000/- ஆகும்.

(இ) ஆடம்பர மோட்டார் வாகனம் ஒன்று 2012, ஓகத்து 1ஆம் திகதி பதிவுசெய்யப்பட்டது. (பதிவு செய்த ஆண்டை அடுத்து வரும் முதலாவது ஆண்டான ) 2013, ஏப்பிறல் 1ஆம் திகதியன்று தொடங்கும் ஆண்டுக்கு ஏற்புடையற்பாலதான அறவீடு ரூ100,000/- ஆகும்.";

(3) முதலாம் அட்டவணையின் பாகம் II இனை உடனடுத்துப் பின்னர் இறுதியில் பின்வரும் பாகத்தினை சேர்ப்பதன் மூலம் :-

"பாகம் III

2011, நவெம்பர் மாதம் 22 ஆம் திகதியன்று அல்லது அதன்பின்னர் தொடங்குகின்றதும் முடிவடைகின்றதும் அது தொடர்பில் இவ் அட்டவணை யின் பாகம்I மற்றும் பாகம்II ஏற்புடைத்தாகாததுமான ஏதேனும் ஆண்டுக்காக:-

| | ஆண்டு | வீதம் ரூபா |
|---|---|---|
| 1. | (2011, நவெம்பர் 22 ஆம் திகதியன்று அல்லது அதன் பின்னர் தொடங்குகின்ற ஆண்டாக வுள்ள) எந்த ஆண்டில் அத்தகைய ஆடம்பர மோட்டார் வாகனம் பதிவுசெய்யப்பட் டுள்ளதோ அந்த ஆண்டுக்கு | 150,000 |
| 2. | அத்தகைய ஆடம்பர மோட்டார் வாகனம் பதிவு செய்யப்பட்ட அந்த ஆண்டை அடுத்து வரும் முதலாவது ஆண்டுக்கு | 100,000 |
| 3. | அத்தகைய ஆடம்பர மோட்டார் வாகனம் பதிவு செய்யப்பட்ட அந்த ஆண்டை அடுத்து வரும் இரண்டாவது ஆண்டுக்கு | 75,000 |

| | ஆண்டு | வீதம் ரூபா |
|---|---|---|
| 4. | அத்தகைய ஆடம்பர மோட்டார் வாகனம் பதிவு செய்யப்பட்ட அந்த ஆண்டை அடுத்து வரும் மூன்றாவது ஆண்டுக்கு | 60,000 |
| 5. | அத்தகைய ஆடம்பர மோட்டார் வாகனம் பதிவு செய்யப்பட்ட அந்த ஆண்டை அடுத்து வரும் நான்காவது ஆண்டுக்கு | 50,000 |
| 6. | அத்தகைய ஆடம்பர மோட்டார் வாகனம் பதிவு செய்யப்பட்ட அந்த ஆண்டை அடுத்து வரும் ஐந்தாவது ஆண்டுக்கு | 40,000 |
| 7. | அத்தகைய ஆடம்பர மோட்டார் வாகனம் பதிவு செய்யப்பட்ட அந்த ஆண்டை அடுத்து வரும் ஆறாவது ஆண்டுக்கு | 30,000 |
| 8. | அத்தகைய ஆடம்பர மோட்டார் வாகனம் பதிவு செய்யப்பட்ட அந்த ஆண்டை அடுத்து வரும் ஏழாவது ஆண்டுக்கு. | இல்லை.'' |

*முதன்மைச் சட்டவாக்கத்துக்கான இரண்டாம் அட்டவணையைத் திருத்துதல்.*

**12.** முதன்மைச் சட்டவாக்கத்துக்கான இரண்டாம் அட்டவணை இத்தாற் பின்வருமாறு திருத்தப்படுகின்றது:-

(1) இவ்வட்டவணையின் பாகம் II இன் தலைப்பினை நீக்கஞ்செய்து அதற்குப் பதிலாக பின்வருவனவற்றை இடுவதன் மூலம்:-

"முதலாவது பதிவாண்டு அல்லது கொடுப்பனவுக் குரிய தேதி 2011, சனவரி 1 ஆந் திகதியன்று தொடங்குகின்ற காலப்பகுதிக்குள் 2011, நவெம்பர் மாதம் 22 ஆந் தேதிக்கு முன்னராக முடிவடைகின்ற விடத்து ஏதேனும் ஆண்டுக்காக:-"

(2) இரண்டாம் அட்டவணையின் பாகம் II இனை உடனடுத்துப் பின்னர் பின்வரும் பாகத்தைச் சேர்ப்பதன் மூலமும்:-

"பாகம் III

2011, நவெம்பர் மாதம் 22 ஆம் திகதியன்று அல்லது அதன்பின்னர் தொடங்கு கின்றதும் முடிவடைகின்றதும் அது தொடர்பில் இவ் அட்டவணையின் பாகம் I மற்றும் பாகம் II ஏற்புடைத்தாகாததுமான ஏதேனும் ஆண்டுக்காக:-

| | ஆண்டு | வீதம் ரூபா |
|---|---|---|
| 1. | 2011, நவெம்பர் 22 ஆம் திகதியன்று அல்லது அதன்பின்னர் தொடங்குகின்ற ஆண்டாக வுள்ள) எந்த ஆண்டில் அத்தகைய ஓரளவு ஆடம்பர மோட்டார் வாகனம் பதிவு செய்யப்பட்டுள்ளதோ அந்த ஆண்டுக்கு | 60,000 |
| 2. | அத்தகைய ஓரளவு ஆடம்பர மோட்டார் வாகனம் பதிவுசெய்யப்பட்ட அந்த ஆண்டை அடுத்துவரும் முதலாவது ஆண்டுக்கு | 50,000 |
| 3. | அத்தகைய ஓரளவு ஆடம்பர மோட்டார் வாகனம் பதிவுசெய்யப்பட்ட அந்த ஆண்டை அடுத்துவரும் இரண்டாவது ஆண்டுக்கு | 40,000 |
| 4. | அத்தகைய ஓரளவு ஆடம்பர மோட்டார் வாகனம் பதிவுசெய்யப்பட்ட அந்த ஆண்டை அடுத்துவரும் மூன்றாவது ஆண்டுக்கு | 30,000 |
| 5. | அத்தகைய ஓரளவு ஆடம்பர மோட்டார் வாகனம் பதிவுசெய்யப்பட்ட அந்த ஆண்டை அடுத்துவரும் நான்காவது ஆண்டுக்கு | 25,000 |
| 6. | அத்தகைய ஓரளவு ஆடம்பர மோட்டார் வாகனம் பதிவுசெய்யப்பட்ட அந்த ஆண்டை அடுத்துவரும் ஐந்தாவது ஆண்டுக்கு | 20,000 |
| 7. | அத்தகைய ஓரளவு ஆடம்பர மோட்டார் வாகனம் பதிவுசெய்யப்பட்ட அந்த ஆண்டை அடுத்துவரும் ஆறாவது ஆண்டுக்கு | 15,000 |
| 8. | அத்தகைய ஓரளவு ஆடம்பர மோட்டார் வாகனம் பதிவுசெய்யப்பட்ட அந்த ஆண்டை அடுத்துவரும் ஏழாவது ஆண்டுக்கு. | இல்லை.". |

**13.** முதன்மைச் சட்டவாக்கத்துக்கான மூன்றாம் அட்டவணை இத்தாற் பின்வருமாறு திருத்தப்படுகின்றது:- *முதன்மைச் சட்டவாக்கத் துக்கான மூன்றாம் அட்டவணை யைத் திருத்துதல்.*

(1) அவ் அட்டவணையின் பாகம் II இன் தலைப்பினை நீக்கஞ் செய்து அதற்குப் பதிலாக பின்வருவனவற்றை இடுவதன் மூலம்:-

"முதலாவது பதிவாண்டு அல்லது கொடுப்பனவுக் குரிய தேதி 2011, சனவரி 1 ஆந் திகதியன்று தொடங்குகின்ற காலப்பகுதிக்குள் 2011, நவெம்பர் 22ஆந் தேதிக்கு முன்னராக முடிவடைகின்றவிடத்து ஏதேனும் ஆண்டுக்காக:-"

(2) மூன்றாம் அட்டவணையின் பாகம் II இனை உடனடுத்துப் பின்னர் பின்வரும் பாகத்தைச் சேர்ப்பதன் மூலமும்:-

"பாகம் III

*அது தொடர்பில் இவ் அட்டவணையின் பாகம் I மற்றும் பாகம் II ஏற்புடைத்தாகாததுமான 2011, நவெம்பர் 22 ஆம் திகதியன்று அல்லது அதன்பின்னர் தொடங்குகின்றதும் முடிவடைகின்றதும் ஏதேனும் ஆண்டுக்காக :-*

| *ஆண்டு* | *வீதம்*<br>*ரூபா* |
|---|---|
| 1. (2011, நவெம்பர் 22 ஆம் திகதியன்று அல்லது அதன் பின்னர் தொடங்குகின்ற ஆண்டாக வுள்ள) எந்த ஆண்டில் அத்தகைய ஓரளவு ஆடம்பர இரட்டை நோக்க மோட்டார் வாகனம் பதிவுசெய்யப் பட்டுள்ளதோ அந்த ஆண்டுக்கு | 40,000 |
| 2. அத்தகைய ஓரளவு ஆடம்பர இரட்டை நோக்க மோட்டார் வாகனம் பதிவு செய்யப்பட்ட அந்த ஆண்டை அடுத்துவரும் முதலாவது ஆண்டுக்கு | 25,000 |
| 3. அத்தகைய ஓரளவு ஆடம்பர இரட்டை நோக்க மோட்டார் வாகனம் பதிவு செய்யப்பட்ட அந்த ஆண்டை அடுத்துவரும் இரண்டாவது ஆண்டுக்கு | 20,000 |

| ஆண்டு | வீதம் ரூபா |
|---|---|
| 4. அத்தகைய ஓரளவு ஆடம்பர இரட்டை நோக்க மோட்டார் வாகனம் பதிவு செய்யப்பட்ட அந்த ஆண்டை அடுத்துவரும் மூன்றாவது ஆண்டுக்கு | 12,000 |
| 5. அத்தகைய ஓரளவு ஆடம்பர இரட்டை நோக்க மோட்டார் வாகனம் பதிவு செய்யப்பட்ட அந்த ஆண்டை அடுத்துவரும் நான்காவது ஆண்டுக்கு | 10,000 |
| 6. அத்தகைய ஓரளவு ஆடம்பர இரட்டை நோக்க மோட்டார் வாகனம் பதிவு செய்யப்பட்ட அந்த ஆண்டை அடுத்துவரும் ஐந்தாவது ஆண்டுக்கு | 8,000 |
| 7. அத்தகைய ஓரளவு ஆடம்பர இரட்டை நோக்க மோட்டார் வாகனம் பதிவு செய்யப்பட்ட அந்த ஆண்டை அடுத்துவரும் ஆறாவது ஆண்டுக்கு | 6,000 |
| 8. அத்தகைய ஓரளவு ஆடம்பர இரட்டை நோக்க மோட்டார் வாகனம் பதிவு செய்யப்பட்ட அந்த ஆண்டை அடுத்துவரும் ஏழாவது ஆண்டுக்கு. | இல்லை.". |

கடந்த காலத்தை உள்ளடக்கும் பயன்

**14.** இச்சட்டத்தின் இப்பாகத்தினால் முதன்மைச் சட்டவாக்கத்துக்குச் செய்யப்பட்ட திருத்தம், எல்லா நோக்கங்களுக்காகவும், 2011, நவெம்பர் 22ஆம் தேதியன்று வலுவுக்கு வந்துவிட்டதாகக் கருதப்படுதல் வேண்டும்.

நட்டோத் தரவாதம்.

**15.** எவரேனுமாள் அல்லது ஆட்கள் குழு, 2011, நவெம்பர் 22ஆம் திகதியிலிருந்து தொடங்குகின்றதும், இச்சட்டம் நடைமுறைக்கு வரும் தேதிவரையிலானதுமான காலப்பகுதியின் போது, இச்சட்டத்தில் ஏற்பாடு செய்யப்பட்டவாறான அறவீட்டைச் சேகரிக்குமிடத்து, அத்தகைய ஆள் அதிகாரத்துடன் செயலாற்றியுள்ளாரெனக் கருதப்படுதல் வேண்டுமென்பதுடன், அத்தகைய சேகரிப்பு எல்லா நோக்கங்களுக்காகவும் செல்லுபடியான முறையில் செய்யப்பட்டுள்ளதாகவும் செய்யப்படு

வதாகவும் கருதப்படுதலும் வேண்டும் அத்துடன் அவருக்கு, அத்தகைய சேகரிப்புத் தொடர்பில், எல்லாக் குடியியல் அல்லது குற்றவியல் வழக்குகளுக்கெதிராகவும் இத்தால் நட்டோத்தரவாத மளிக்கப்படுகின்றது.

## பாகம் IV

### *(235 ஆம் அத்தியாயமான) சுங்கக் கட்டளைச்சட்டம், (423ஆம் அத்தியாயமான) செலவாணிக் கட்டுப்பாட்டுச் சட்டம் மற்றும் 1969 ஆம் ஆண்டின் 1 ஆம் இலக்க, இறக்குமதி ஏற்றுமதி (கட்டுப்பாடு ) சட்டத்தின் ஏற்பாடுகளின் ஏற்புடைமை யிலிருந்து விலக்களிப்பு*

*235ஆம் அத்தியாயத்தின் ஏற்பாடுகளின் ஏற்புடைமை யிலிருந்து குறித்த சில தொழில் முயற்சிகளுக்கு விலக்களிப்பு அளித்தல்.*

**16.** (1) 1978ஆம் ஆண்டின் 4ஆம் இலக்க, இலங்கை முதலீட்டுச் சபை சட்டத்தின் கீழ் தாபிக்கப்பட்ட இலங்கை முதலீட்டுச் சபையுடன் செய்யப்பட்ட உடன்படிக்கையொன்றின் கருத்திற்குட் பட பின்வரும் ஏதேனும் ஒன்று அல்லது அதற்கு மேற்பட்ட தொழில் முயற்சியில் ஈடுபட்டுள்ள ஏதேனும் தொழில் முயற்சி (235ஆம் அத்தியாயமான) சுங்கக் கட்டளைச்சட்டத்தின் ஏற்பாடு களின் ஏற்புடமையிலிருந்து (2) ஆம் (3)ஆம் உட்பிரிவுகளின் ஏற்பாடுகளுக்கமைய விலக்களிப்பு பெறுதல் வேண்டும் :-

(அ) இறக்குமதி, சிறுபதனீடு மற்றும் மீள் ஏற்றுமதியுடன் சம்பந்தப்பட்டுள்ள துறைமுக நுழைவு வியாபாரம் ;

(ஆ) பண்டங்கள் ஒரு நாட்டிலிருந்து பெறப்பட்டு அல்லது ஒரு நாட்டில் உற்பத்தி செய்யப்பட்ட இலங்கையினுள் அதனை கொண்டுவராது வேறு நாட்டிற்கு கப்பலேற் றப்படுகின்றவிடத்து கரைகடந்த தொழில் ;

(இ) வெளிநாட்டு வாடிக்கையாளருக்கான முன்னரங்கு நிறைவு சேவைகளை வழங்குதல் ;

(ஈ) முன்னிலை கொள்வனவாளரை தலைமையக தொழிற் பாடுகளில் முகாமைக்கான நிதி விநியோக தொடர் மற்றும் பட்டியலிடல் தொழிற்பாடுகள் ;

(உ) இலங்கையில் பிணைக்குதம் அல்லது பன்நாட்டு தொகுதியாக ஒன்றுசேர்க்கப்பட்ட அத்தகைய சாதனங்கள் பேணும் சேவைகள்.

(2) மீள் ஏற்றுமதிக்கான பண்டங்கள், பொருட்கள் அல்லது வியாபார பண்டங்களில் உருப்படி ரீதியிலான இறக்குமதியில் ஈடுபட்டுள்ள (1) ஆம் உட்பிரிவில் குறிப்பீடு செய்யப்பட்ட ஏதேனும் தொழில் முயற்சி–

(அ) 1979ஆம் ஆண்டின் 51ஆம் இலக்க, இலங்கை துறைமுக அதிகாரசபைச் சட்டத்தின் கீழ் தாபிக்கப்பட்ட இலங்கைத் துறைமுக அதிகாரசபையின் மேற்பார்வையின் கீழ் தொழிற்படுத்தப்பட்ட சுதந்திரத் துறைமுகமொன்றில் அல்லது 1978ஆம் ஆண்டின் 4ஆம் இலக்க, இலங்கை முதலீட்டுச் சபை சட்டத்தின் கீழ் அல்லது (235 ஆம் அத்தியாயமான) சுங்கக் கட்டளைச் சட்டத்தால் வெளிப்படுத்தப்பட்ட பிணையத்தின் இடப்பரப்பொன் றில் அத்தகைய செயற்பாடுகளை மேற்கொள்ளல் வேண்டும் ;

(ஆ) ஓராம் உட்பிரின் ஏற்பாடுகள் எது எவ்வாறிருப்பினும் இலங்கையின் ஆள்புலத்திற்கும் ஆள்புலத்திலிருந்தும் அத்தகைய சுதந்திர துறைமுகம் அல்லது பிணையத் தின் இடப்பரப்பிற்கும் அவற்றிலிருந்தும் பண்டங்களின் ஏதேனும் அசைவு விடயத்திற்கேற்ப அத்தகைய பண்டங் கள் இலங்கைக்கு இறக்குமதி செய்யப்பட்டுள்ளதைப் போன்று அல்லது இலங்கையிலிருந்து இறக்குமதி செய்யப்பட்டுள்ளதைப் போன்று சுங்கக் கட்டளைச் சட்டத்தின் ஏற்பாடுகளுக்கமைந்ததாதல் வேண்டும்.

(3) பண்டங்கள்,பொருட்கள் அல்லது வியாபாரப் பண்டங்களின் உருப்படிரீதியிலான அசைவில் ஈடுபட்டுள்ள (1)ஆம் உட்பிரிவில் குறிப்பீடு செய்யப்பட்ட ஏதேனும் தொழில் முயற்சி மேலே குறிப்பீடுசெய்யப்பட்டவாறான சுதந்திர துறைமுகம் அல்லது பிணையத்தின் இடப்பரப்பிற்கு வெளியே அத்தகைய செயற்பாடு களை நிறைவேற்றலாம்.

*423ஆம் அத்தியாயத்தின் ஏற்பாடுகளின் ஏற்புடைமை யிலிருந்து குறித்த சில தொழில் முயற்சிகளுக்கு விலக்களிப்பு அளித்தல்.*

**17.** (1) 1978ஆம் ஆண்டின் 4ஆம் இலக்க, இலங்கை முதலீட்டுச் சபை சட்டத்தின் கீழ் தாபிக்கப்பட்ட இலங்கை முதலீட்டுச் சபையுடன் செய்யப்பட்ட உடன்படிக்கையொன்றின் கருத்திற்குட் பட பின்வரும் ஏதேனும் ஒன்று அல்லது அதற்கு மேற்பட்ட தொழிலில் ஈடுபட்டுள்ள தொழில் முயற்சி (432ஆம் அத்தி யாயமான) செலவாணிக் கட்டுப்பாட்டுச் சட்டத்தின் ஏற்பாடு களின் ஏற்புடமையிலிருந்து (2) ஆம் (3)ஆம் உட்பிரிவுகளின் ஏற்பாடுகளுக்கமைய விலக்களிப்பு பெறுதல் வேண்டும்:-

*(அ)* *இறக்குமதி, சிறுபதனீடு மற்றும் மீள் ஏற்றுமதியுடன் சம்பந்தப்பட்டுள்ள துறைமுக நுழைவு வியாபாரம் ;*

*(ஆ)* *பண்டங்கள் ஒரு நாட்டிலிருந்து பெறப்பட்டு அல்லது ஒரு நாட்டில் உற்பத்திசெய்யப்பட்ட இலங்கையினுள் அதனை கொண்டுவராது வேறு நாட்டிற்கு கப்பலேற்றப் படுகின்றவிடத்து கரைகடந்த தொழில் ;*

*(இ)* *வெளிநாட்டு வாடிக்கையாளருக்கான முன்னரங்கு நிறைவு சேவைகளை வழங்குதல் ;*

*(ஈ)* *முன்னிலை கொள்வனவாளரை தலைமையக தொழிற் பாடுகளில் முகாமைக்கான நிதி விநியோக தொடர் மற்றும் பட்டியலிடல் தொழிற்பாடுகள் ;*

*(உ)* *இலங்கையில் பிணைக்குதம் அல்லது பன்நாட்டு தொகுதியாக ஒன்றுசேர்க்கப்பட்ட அத்தகைய சாதனங்கள் பேணும் சேவைகள்.*

*(2) மீள் ஏற்றுமதிக்கான பண்டங்கள், பொருட்கள் அல்லது வியாபார பண்டங்களில் உருப்படி ரீதியிலான இறக்குமதியில் ஈடுபட்டுள்ள (1) ஆம் உட்பிரிவில் குறிப்பீடு செய்யப்பட்ட ஏதேனும் தொழில் முயற்சி -*

*(அ)* *1979ஆம் ஆண்டின் 51ஆம் இலக்க, இலங்கை துறைமுக அதிகாரசபைச் சட்டத்தின் கீழ் தாபிக்கப்பட்ட இலங்கை துறைமுக அதிகாரசபையின் மேற்பார்வையின் கீழ் தொழிற்படுத்தப்பட்ட சுதந்திரத் துறைமுகமொன்றில் அல்லது 1978ஆம் ஆண்டின் 4ஆம் இலக்க, இலங்கை முதலீட்டுச் சபை சட்டத்தின் கீழ் அல்லது (235 ஆம் அத்தியாயமான) சுங்கக் கட்டளைச் சட்டத்தால் வெளிப்படுத்தப்பட்ட பிணையத்தின் இடப்பரப்பொன் றில் அத்தகைய செயற்பாடுகளை மேற்கொள்ளல் வேண்டும் ;*

*(ஆ)* *ஓராம் உட்பிரிவின் ஏற்பாடுகள் எது எவ்வாறிருப்பி னும் இலங்கையின் ஆள்புலத்திற்கும் ஆள்புலத்தி லிருந்தும் அத்தகைய சுதந்திர துறைமுகம் அல்லது*

பிணையத்தின் இடப்பரப்பிற்கும் அவற்றிலிருந்தும் பண்டங்களின் ஏதேனும் அசைவு விடயத்திற்கேற்ப அத்தகைய பண்டங்கள் இலங்கைக்கு இறக்குமதி செய்யப்பட்டுள்ளதைப் போன்று அல்லது இலங்கையி லிருந்து இறக்குமதி செய்யப்பட்டுள்ளதைப் போன்று சுங்கக் கட்டளைச் சட்டத்தின் ஏற்பாடுகளுக்கமைந்தாதல் வேண்டும்.

(3) பண்டங்கள்,பொருட்கள் அல்லது வியாபாரப் பண்டங்களின் உருப்படிரீதியிலான அசைவில் ஈடுபட்டுள்ள (1)ஆம் உட்பிரிவில் குறிப்பீடு செய்யப்பட்ட ஏதேனும் தொழில் முயற்சி மேலே குறிப்பீடு செய்யப்பட்டவாறான சுதந்திரத் துறைமுகம் அல்லது ஒரு பிணையத்தின் இடப்பரப்பிற்கு வெளியே அத்தகைய செயற் பாடுகளை நிறைவேற்றலாம்.

*1969ஆம் ஆண்டின் 1ஆம் இலக்கச் சட்டத்தின் ஏற்புடைமை யிலிருந்து குறித்த சில தொழில் முயற்சிகளுக்கு விலக்களிப்பு அளித்தல்.*

**18.** (1) 1978ஆம் ஆண்டின் 4ஆம் இலக்க, இலங்கை முதலீட்டுச் சபை சட்டத்தின் கீழ் தாபிக்கப்பட்ட இலங்கை முதலீட்டுச் சபையுடன் செய்யப்பட்ட உடன்படிக்கையொன்றின் கருத்திற்குட் பட பின்வரும் ஏதேனும் ஒன்று அல்லது அதற்கு மேற்பட்ட தொழிலில் ஈடுபட்டுள்ள தொழில் முயற்சி 1969ஆம் ஆண்டின் 1ஆம் இலக்க, இறக்குமதி ஏற்றுமதி (கட்டுப்பாட்டு) சட்டத்தின் ஏற்பாடுகளின் ஏற்புடமையிலிருந்து (2) ஆம் (3)ஆம் உட்பிரிவு களின் ஏற்பாடுகளுக்கமைய விலக்களிப்பு பெறுதல் வேண்டும்:-

(அ) இறக்குமதி, சிறுபதனீடு மற்றும் மீள் ஏற்றுமதியுடன் சம்பந்தப்பட்டுள்ள துறைமுக நுழைவு வியாபாரம் ;

(ஆ) பண்டங்கள் ஒரு நாட்டிலிருந்து பெறப்பட்டு அல்லது ஒரு நாட்டில் உற்பத்தி செய்யப்பட்ட இலங்கையினுள் அதனை கொண்டுவராதவேறு நாட்டிற்கு கப்பலேற்றப் படுகின்ற விடத்து கரைகடந்த தொழில் ;

(இ) வெளிநாட்டு வாடிக்கையாளருக்கான முன்னரங்கு நிறைவு சேவைகளை வழங்குதல் ;

(ஈ) முன்னிலை கொள்வனவாளரை தலைமையக தொழிற்பாடுகளில் முகாமைக்கான நிதி விநியோக தொடர் மற்றும் பட்டியலிடல் தொழிற்பாடுகள் ;

(உ) இலங்கையில் பிணைக்குதம் அல்லது பன்நாட்டு தொகுதியாக ஒன்றுசேர்க்கப்பட்ட அத்தகைய சாதனங்கள் பேணும் சேவைகள்.

(2) மீள் ஏற்றுமதிக்கான பண்டங்கள், பொருட்கள் அல்லது வியாபார பண்டங்களில் உருப்படி ரீதியிலான இறக்குமதியில் ஈடுபட்டுள்ள (1) ஆம் உட்பிரிவில் குறிப்பீடு செய்யப்பட்ட ஏதேனும் தொழில் முயற்சி :-

(அ) 1979ஆம் ஆண்டின் 51ஆம் இலக்க, இலங்கை துறைமுக அதிகாரசபைச் சட்டத்தின் கீழ் தாபிக்கப்பட்ட இலங்கைத் துறைமுக அதிகாரசபையின் மேற்பார்வையின் கீழ் தொழிற்படுத்தப்பட்ட சுதந்திரத் துறைமுகமொன்றில் அல்லது 1978ஆம் ஆண்டின் 4ஆம் இலக்க, இலங்கை முதலீட்டுச் சபை சட்டத்தின் கீழ் அல்லது (235ஆம் அத்தியாயமான) சுங்கக் கட்டளைச் சட்டத்தால் வெளிப்படுத்தப்பட்ட பிணையத்தின் இடப்பரப்பொன்றில் அத்தகைய செயற்பாடுகளை மேற்கொள்ளல் வேண்டும்;

(ஆ) ஓராம் உட்பிரிவின் ஏற்பாடுகள் எது எவ்வாறிருப்பினும் இலங்கையின் ஆள்புலத்திற்கும் ஆள்புலத்திலிருந்தும் அத்தகைய சுதந்திரத் துறைமுகம் அல்லது பிணையத்தின் இடப்பரப்பிற்கும் அவற்றிலிருந்தும் பண்டங்களின் ஏதேனும் அசைவு விடயத்திற்கேற்ப அத்தகைய பண்டங்கள் இலங்கைக்கு இறக்குமதி செய்யப்பட்டுள்ளதைப் போன்று அல்லது இலங்கையிலிருந்து இறக்குமதி செய்யப்பட்டுள்ளதைப் போன்று சுங்கக் கட்டளைச் சட்டத்தின் ஏற்பாடுகளுக்கமைந்ததாதல் வேண்டும்.

(3) பண்டங்கள்,பொருட்கள் அல்லது வியாபாரப் பண்டங்களின் உருப்படிரீதியிலான அசைவில் ஈடுபட்டுள்ள (1)ஆம் உட்பிரிவில் குறிப்பீடு செய்யப்பட்ட ஏதேனும் தொழில் முயற்சி மேலே குறிப்பீடு செய்யப்பட்டவாறான சுதந்திரத் துறைமுகம் அல்லது ஒரு பிணையத்தின் இடப்பரப்பிற்கு வெளியே அத்தகைய செயற்பாடுகளை நிறைவேற்றலாம்.

*தொழில் முயற்சிகள் காலத்திற்குக் காலம் அறிக்கையிடத் தேவைப் படுத்தப்படல்.*

**19.** பதினாறாம், 17 மற்றும் 18 ஆம் பிரிவுகளின் நியதிகளின்படி எந்த தொழில் முயற்சிகளுக்கு விலக்களிப்புகள் வழங்கப்பட்டுள்ளனவோ அந்த தொழில் முயற்சிகள் –

(அ) வெளிநாட்டுச் செலவாணி அனுப்புதொகை உள்வருகை மற்றும் வெளிச்செல்லுகை அத்துடன் வேறு கொடுக்கல் வாங்கல்கள் தொடர்பிலான ஆவணங்களின் முறையான பேணுகையை உறுதிப்படுத்தலும் ;

(ஆ) வெளிநாட்டுச் செலாவணி அனுப்புதொகை உள்வருகை மற்றும் வெளிச்செல்லுகைமீது வருடாந்தம் அல்லது விடயத்திற்கேற்ப சுங்கப் பணிப்பாளர் தலைமையதிபதி, செலாவணிக் கட்டுப்பாட்டாளர் அல்லது இறக்குமதி ஏற்றுமதிக் கட்டுப்பாட்டாளரால் அவ்வாறு செய்யுமாறு பணிக்கும்போது அறிக்கையிடுதலும் ; அத்துடன்

(இ) இலங்கை முதலீட்டுச் சபையின் தவிசாளருடனான கலந்தாலோசனையுடன் செலாவணிக் கட்டுப்பாட்டாளர் மற்றும் சுங்கப் பணிப்பாளர் தலைமையதிபதி ஆகியோரினால் விதித்துரைக்கப்படுகின்றவாறான வேறு எல்லா விபரங்களை அத்தகைய அறிக்கையில் உள்ளடக்குதலும்,

வேண்டும்.

*ஒவ்வாமையின் விடயத்தில் சிங்கள உரை மேலோங்கி நிற்றல்.*

**20.** இச்சட்டத்தில் சிங்கள, தமிழ் உரைகளுக்கிடையே ஏதேனும் ஒவ்வாமை ஏற்படும் பட்சத்தில் சிங்கள உரையே மேலோங்கி நிற்றல் வேண்டும்.

பாராளுமன்றத்தின் சட்டமூலங்களினதும் சட்டங்களினதும் தமிழ்ப் பிரதிகளின் வருடாந்த சந்தா (உள்நாடு) ரூபா 1,387 : (வெளிநாடு) ரூபா 1,849 : ஒவ்வோராண்டும் திசெம்பர் மாதம் 15 ஆந் தேதிக்கு முன் எதிர்வரும் ஆண்டுக்கான சந்தாப்பணம் அத்தியட்சகர், அரசாங்க வெளியீட்டலுவலகம், அரசாங்க தகவல் திணைக்களம், இல. 163, கிருலபனை மாவத்தை, பொல்ஹேன்கொடை, கொழும்பு 05 என்ற விலாசத்திற்கு அனுப்பப்பட வேண்டும்